**தேதி :** 26.02.2026 **SC.No. :** 71/2020 PW **:11** ஆடிவேல்

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வாடகை ரசீது எதுவும் அ.சா.1 தரவில்லை. அ.சா.1 க்கும், எதிரிகளுக்கும் முன்பகை இருந்ததாகவோ, கொலை செய்ய வேண்டும் என்ற உள்நோக்கம் இருந்ததாக புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் எதிரி அ.சா.1 ஐ ஒரே ஒரு தடவை வெட்டியதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார் மனுவில் டிராக்டர் ஓட்டுநர் கண்ணனை அனுப்பி வைத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் குளத்திற்குள் குப்பைகளை போட்டதினால் சத்தம் போட்டதாக டிரைவர் தன்னிடம் சொன்னதாக அ.சா.1 புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

டிரைவரிடம் சுடுகாட்டு பக்கம் வண்டியை நிறுத்தி வைக்க சொன்னதாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் நானும், எனது மைத்துனரும் வண்டியை நிப்பாட்ட சென்றதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்திற்கு எதிரிகள் பைக்கில் வந்ததாக புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகாரில் கை வெட்டுப்பட்டு இரண்டாக பிளந்தது என குறிப்பிடவில்லை என்றால் இரண்டாக பிளந்ததாக கூறவில்லை. வேலுச்சாமித்தேவர் மகன் பேச்சிமுத்து எனது கையில் துணியை கட்டினார் என அ.சா.1 புகாரிலும், என்னுடைய விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான்.

புகாரை எனது தம்பி மகேஷ்குமார் எழுதினார் என்று கூறவில்லை என்றால் சரிதான். அறிவேன் சாட்சியாக புகார் மனுவில் கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான். எந்த இடத்தில் வரும்போது சம்பவம் நடந்தது என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 307 இதச சம்பந்தப்பட்ட முதல்தகவல்அறிக்கை உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் முதல்தகவல்அறிக்கை 8 நாட்கள் காலதாமதத்துடன் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் நாங்கள் உடனடியாக அனுப்பி வைத்தோம். நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

அ.சா.1ன் டிராக்டர் நம்பரை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியின் பைக் நம்பர், அ.சா.1ன் பைக் நம்பர் புகார் வாக்குமூலத்திலும், என்னுடைய விசாரணையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அரிவாள் எந்த வகையானது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர், வரைபடம் 20.07.2020 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் பின்னால் தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

அ.சா.1 என்னுடைய விசாரணையில் புகார் மனுவை ஏட்டையா அவர்களிடம் கொடுத்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். 161(3) வாக்குமூலங்கள் 20.07.2020ல் காலதாமதத்துடன் நீதிமன்றத்திற்கு வரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆவணங்கள் பின்யோசனையின்பேரில் தயாரித்ததினால் காலதாமதத்துடன் வரப்பெற்றுள்ளது என்றால் சரியல்ல.

கைப்பற்றப்பட்ட இரத்தம் பட்ட மண், இரத்தம் படாத மண் இரசாயன பரிசோதனைக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். அரசு தரப்பு வழக்கு பாதிக்கும் என்பதினால் கைப்பற்றப்பட்ட இரத்தம் பட்ட மண், இரத்தம் படாத மண் ஆகியவற்றை இரசாயன பரிசோதனைக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1ன் துணிகள் எதுவும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். டிராக்டர் அ.சா.1க்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்கும் ஆர்.சி.புக் எதையும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். சாட்சியங்களின் வாக்குமூலங்கள் கணினியில் டைப் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சிகள் என்னிடம் சொல்லச் சொல்ல தட்டச்சு செய்யப்பட்டது என 161(3) வாக்குமூலத்தின் கீழ் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

எதிரிகள் மிரட்டியதினால் பயஉணர்வு ஏற்பட்டதாக புகார் மனுவிலும், விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் ஏசியதினால் தனக்கும், மற்றவர்களுக்கும் அவமானம் ஏற்பட்டதாக புகார் வாக்குமூலத்திலும், என்னுடைய விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 தனது விசாரணையில் ஜே.சி.பியை வைத்து சிறப்பு பணியில் இருந்த அதிகாரிகள் குப்பைகளை அள்ளி என் டிராக்டர் மூலம் யூனியனுக்கு பாத்தியப்பட்ட குளத்தில் போட்டார்கள் என்று என்னுடைய விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல.

சம்பவத்திற்கு மறுநாள் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். கடையநல்லூர் அரசு மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைக்கப்பெற்று அங்கு சென்றபோது நோயாளி திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டதாக தகவல் தெரிந்து அங்கு சென்று பார்த்தபோது, அங்கிருந்து நோயாளி நாகர்கோவில்

சுஸ்ருசா மருத்துவமனைக்கு சென்றதாக தகவல் தெரிந்து அங்கு சென்று புகார்மனு பெற்று நிலையம் வந்து முதல்தகவல்அறிக்கை பதிவு செய்ததினால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. புகார் மனுவை காயம்பட்ட நபரின் சகோதரர் ரமேஷ்குமார் கைப்பட எழுதியதாக விசாரணையில் அ.சா.1 சொல்லியுள்ளார். ரமேஷ்குமாரை நான் விசாரிக்கவில்லை. சாட்சி பட்டியலில் சேர்க்கவில்லை.

நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்தாரிடம் இருந்து புகார மனு எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்திலிருந்து சான்று பொருட்கள் எதையும் நான் கைப்பற்றவில்லை என்றாலும், இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சான்றுபொருட்களுக்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் எழுதாத வெள்ளைப் பேப்பரில் அ.சா.1 டம் கையெழுத்து வாங்கி பின்யோசனையின் பேரில் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டதினால் தான் முதல்தகவல்அறிக்கை நீதிமன்றத்திற்கு காலதாமதமாக வரப்பெற்றுள்ளது என்றால் சரியல்ல. வாக்குமூலங்கள் அனைத்தும் இரண்டரை வருடங்கள் கழித்து நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 ன் டிரைவர் கண்ணன் என்பவர் எதிரியின் செங்கல்மாலுக்கு அருகில் குப்பைகளை கொட்டினார் என்றாலும், அதனை கேள்விபட்ட 2 வது எதிரி தென்காசி மதுரை ரோட்டிற்கு கீழ்புறம் செங்கல்மால் செல்லும் பாதையில் வைத்து சாட்சி கண்ணன் என்பவரிடம் "எங்க இடத்துல குப்பைகளை

கொட்டி சுகாதாரக்கேடு ஏன் ஏற்படுத்துறீங்க" என்று கேட்டார். அப்போது சாட்சி கண்ணன் என்பவர் எதிரியை பார்த்து பொது இடத்தில் வைத்து பெண் என்றும் பாராமல் அசிங்கமாக பேசி அவமானப்படுத்தினார் என்றும், இதனை 2 வது எதிரி தனது கணவரிடம் சொல்லி தன் மீது புகார் கொடுத்து விடுவார் என்று நினைத்து தப்பிப்பதற்காக சாட்சி கண்ணன் சொன்னதின் பேரில் அ.சா.1 தனக்கு வேறு விதத்தில் ஏற்பட்ட காயத்தை வைத்து பொய் புகார் கொடுத்துள்ளார் என்றாலும், அதனை சரிவர விசாரிக்காமல் ஒருதலைபட்சமாக விசாரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அரிவாள் 4 மாதங்கள் கழித்து தான் கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். அதில் இரத்தக்கறை இருந்ததாக அத்தாட்சியில் துலங்காது என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.27 15:46:22 +0530